# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1780/8 - 2012 ඔක්තෝබර් 16 වැනි අඟහරුවාදා - 2012.10.16

*1780/8 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. நவ/கா/1/1/11/எல்ஏ/4603.
காணி அமைச்சின் இல. 03ஜே/83/ஐஆர்/28.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், நவகத்தேகமை பிரதேச செயலாளர் பிரிவில், கிரிமெட்டியாபத்துவை சிறு பிரிவில், இல. 645 – கோண்கடவளை கிராம உத்தியோகத்தர் பிரிவில், கோன்கடவளை கிராமத்தில் அமைந்துள்ள, இறுதிக் கிராம வரைபட இல. 3218, பிற்சேர்க்கை இல. 10 இல் துண்டு இல. 408 எனக் காட்டப்பட்ட 2.0971 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

01. துண்டு இல. 408

காணியின் பெயர் : தங்கஹவத்த ; விபரம் : சேனை ; ஆரம்ப உரிமை கோருபவர் : ஆர். எச். எம். புஞ்சிபண்டா, ஆர். எச். எம். டிங்கிரி அம்மா, ஆர். எச். எம். பீ. டிங்கிரி பண்டா ; விஸ்தீரணம் : 2.0971 ஹெக்டயார்ஸ்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நவகத்தேகமை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆர். பீ. ஜீ. பொடிநேரிஸ்,
பிரதேச செயலாளர்,
நவகத்தேகமை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
நவகத்தேகமை,
2012.10.15.

11 - 58